ஆய்வு - பன்னாட்டு தமிழ் ஆய்விதழ் (அறிஞர்களால் மதிப்பாய்வு செய்யப்படும் காலாண்டிதழ்)
AAIVU - INTERNATIONAL TAMIL RESEARCH JOURNAL (A peer reviewed quarterly Journal)
Volume: 3 Issue: 2 APRIL (2022)
http://aaivu.unaux.com

# கலைவரலாற்றில் ஸ்ரீமதி பாலசரஸ்வதி அம்மையார் அவர்களின் பங்கும் பணியும்

# Mrs. Balasaraswati's Role and Role in The History of Art

முனைவர் திருமதி சுகன்யா அரவிந்தன்
{Ph.D (Carnatic Music), MPhil (Carnatic Music), MFA (Bharathanatyam), BFA (Carnatic music), BA (Sociology), PGD in Education.}
முதுநிலை விரிவுரையாளர்,
இசைத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
இலங்கை
saravinthon@hotmail.com
0094773166799
**Dr (Mrs) Suhanya Aravinthon,**
*{PhD in Carnatic Music, MFA [Bhatathanatyam],BFA [Carnatic Music], BA[ Sociology] & PGD in Education.}*
Senior Lecturer,Department of Music, University of Jaffna, Sri Lanka.
saravinthon@hotmail.com
0094 773166799

**ஆய்வுச்சுருக்கம்.**

காலந்தோறும் தென்னக இசையியல் மரபிலே பெண்களின் பங்களிப்பு கணிசமாகவே இருந்திருக்கின்றது. பெண்களது பங்களிப்பு என்பது கலைமரபின் வளர்ச்சிக்கு மிகவும் பக்கபலமாக இருந்திருக்கின்றது என்றால் மிகையில்லை. வெறுமனே கலை மரபின் வளர்ச்சி என்பதற்கப்பால் பண்பாட்டின் தனித்துவங்களைப் பேணி கலைகளின் தன்மை மங்காமல் காத்து சந்ததிக்கையளிப்பு செய்வதிலும் மிகவும் கணிசமான பங்கு பெண்கள் வகித்திருக்கின்றார்கள் என்றால் மிகையில்லை. தமிழ்மரபிலே காலந்தோறும் வளர்க்கப்பட்ட கலைமரபுகளுள் பெண்களின் பங்கு காத்திரம் மிக்கதாக இருந்திருப்பதை வரலாறுவாயிலாகத் தெரிந்துகொள்ளமுடிகின்றது.

சங்ககால கூத்தர் மரபிலும், பாணர் மரபிலும் பெண்களது பங்கு அதிகமாக இருந்ததைக்காணமுடிகின்றது. இந்தநிலையிலே இவர்கள் ஆட்சிபீடத்திலிருப்பவர்களால் மிகவும் போஷிக்கப்பட்டும், ஆட்சி சம்பிரதாயங்களிலே முக்கியமளித்தும் வந்திருக்கின்றார்கள்.

## Abstract

The contribution of women in the Southern musical tradition has been considerable over time. It is no exaggeration to say that the contribution of women has been a great support to the development of the art world. Beyond the mere development of the art tradition, women have played a significant role in nurturing the uniqueness of the culture while preserving the character of the arts.

Historically, the role of women in the art traditions nurtured in the Tamil language has been significant over time.It can be seen that the role of women was high in the Kooththar traditions and Paanar traditions in Sangam period. In this situation, they have been highly nurtured by those in power and have become important in governance.

**குறு சொற்கள்:**

ஆடல் மரபு, கலைஆளுமை, பண்பாட்டு மாற்றம், கருத்தியல் பரிமாற்றம், சமூக ஏற்புடைமை

## Key Words

Dance Tradition, Aesthetic Personality, Cultural Change, Conceptual exchange¸ Social Acceptance.

**முன்னுரை**

காலந்தோறும் இசையும் நடனமும் தமிழோடு கூடி வளர்ந்தது. காலத்தின் ஏற்புடைமைக்கேற்ப அது தன்னளவிலே மாற்றங்களை ஏற்றுக்கொண்டிருந்தபோதும் சமூகத்திலே முக்கியமான ஒரு பங்கினை இது பெற்றிருந்தது.

இந்த நிலையிலே இசையும் பரதமும் கைவரப்பெற்ற ஆளுமைகளில் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியவர் ஸ்ரீமதி பாலசரஸ்வதி அம்மையார்.

இவர் ஒருகாலத்திலே தமிழ்ச் சமூகத்திலே கலைகள் தேவரடியார்களின் போஷிப்பிலே வளர்ந்து மேன்மையுற்றிருக்கின்றது. பின்னர் சமூகமாற்றங்களின் பேறாகக்கலைவடிவங்கள் கவனிப்பாரற்று தன்னிலை மறைந்துவிடுமோ என்கின்ற

வகையிலே சமூகத்திலிருந்து புறந்தள்ளி கலைக்காவலர்கள் அற்று அழிவின் விளிம்பிலே கலைகள் இருந்தன. இந்த நிலையினை மாற்றி இசையினையும் பரதத்தினையும் மரபு மாறாமல் காத்து பேணி வளர்த்தது மாத்திரமல்லாமல் தனித்துவம் மாறாமல் அடுத்த சந்ததிக்குக்கையளிப்புச் செய்தவர்களில் பாலசரஸ்வதி அம்மையார் அவர்களது பணி மிகவும் முக்கியமானது. இவரது கலைப்பணி என்றும் மீள வலியுறுத்தப்படவேண்டிய ஒன்று. இந்த வகையிலே இக்கட்டுரையானது அம்மையாரவர்களது வாழிவியல் மற்றும் கலைப்பணிகளை மீளவும் வலியுறுத்தும் வகையிலே அமைக்கப்பட்டிருக்கின்றது.

**ஸ்ரீமதி பாலசரஸ்வதி - அறிமுகம்.**

1918இல் தஞ்சையில் பிறந்த இவர் வீணாஸரஸ்வதி என்று போற்றப்பட்ட வீணை தனம்மாள். இவர்களின் மகளாகிய ஜயம்மாள் அவர்களின் புதல்வியாகப்பிறந்தவர் பாலசரஸ்வதி அவர்கள். இவரது பூர்வீக உறவுகள் யாபேரும் இசையிலும் பரதத்திலும் மிகவும் சிறந்து விளங்கியவர்கள். கலைக்குடும்ப வாரிசாக அவதரித்த இவர் இசைக்கலையினைத் தனது தாயாரிடமும ஆடற்கலையினைத் தஞ்சை நால்வரின் வழிவந்த கந்தப்ப நட்டுவனாரிடம் கற்றுத் தெளிந்தார்.

நான்காவது வயதிலே தன்னுடைய பயிற்சியினை ஆரம்பித்த இவர் தன்னுடைய ஏழாவது வயதிலே, 1925ம் வருடம் காஞ்சிபுரத்திலே அன்னமாக்ஷி அம்மன் தேவஸ்தானத்திலே முதலாவது அரங்கேற்றத்தை நிகழ்த்தினார். (மரபு தந்த மாணிக்கங்கள் பக் 103)

இசை மற்றும் ஆடற்கலை பற்றிப்பேசுகின்ற பொழுது தஞ்சையைச் சேர்ந்த பாலசஸ்வதி அம்மாள் பற்றிப்பேசாதிருக்க முடியாது. இவர் கலைக்காகச் செய்த பணிகள், கலையோடு ஒன்றியிருந்த விதம் எனப்பல சிறப்புப்பண்புகள் இவரின் கலைப்பணி சிறக்கக் காரணமாயிற்று.

**சமூகப்பின்னணி**

கிபி 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இசை மற்றும் ஆடல் கலையினை போஷிப்பவர்களாக தேவரடியார்கள் காணப்பட்டனர். இவர்கள் தம்மை இறைவனுக்கு அர்ப்பணம் செய்தவர்களாக வாழ்ந்தார்கள். மேலும் இவர்களது வழக்கத்தின் படி இப்பெண்கள் தாய்வழிவீட்டிலேயே வாழ்தல் வேண்டும் போன்ற அவர்களுக்கேயுரிய சட்டவரம்புகளுடன் வாழ்ந்து கலைமரபுகளை வாழ்வித்துவந்தனர். இந்தக்காலகட்டத்திலே இவர்களது வாழ்வில் வறுமை சூழ்ந்திருந்த பொழுதிலும் கலைக்காகத் தம்வாழ்வை அர்ப்பணித்தல் என்கின்ற உறுதிப்பட‌ாட்டிலிருந்து இவர்கள் தவறிவில்லை.

இதன்பின் 20ம் நூற்றாண்டின் நடுக்கூறின் பின் தமிழக அரசின் பார்வை இக்கலைத்துறையினர் மீது திரும்பிய பிற்பாடு இவர்களுக்கான ஆதரவு அரசினால் மேற்கொள்ளப்பட்டு சமூகத்திலும் ஏற்புடைமையினை ஏற்படுத்திக்கொடுத்தது.

இந்த பாதையிலேயே பாலசரஸ்வதி அவர்களும் தம் வாழ்வை முன்னெடுத்து வந்தவராயிருக்கின்றார். 1950 களின் பிற்பாடு தமிழகத்தின் கலைவளர்க்கும் கேந்திரங்களுள் முக்கியமாகக் கொள்ளக்கூடிய மியூசிக் அக்கடமியின் நிர்வாகத்தினர் அவரது சிறப்பையும் மேன்மையினையும் உணர்ந்து இவரது ஆற்றலை உலகறியச்செய்வதிலே முனைப்புடன் செயற்படத்தொடங்கினர்.

1934 இல் தென்னிந்தியாவிலே கலைப்பணியாற்றிய உதயசங்கர் அவர்கள்

தன்னுடைய படைப்புக்களிலே இவரை இணைத்ததோடல்லாமல் கல்கத்தாவிலே இடம் பெற்ற அனைத்து மாநாடுகளிலும் இவரது படைப்புக்களை மேடையேற்றி இவரது திறனை உலகினுக்கு வெளிப்படுத்தினார். (**Tanjore Balasaraswati – The Great** Indian Dancer Who Popularized Bharatanatyam All Over The World Raj Kumar Hansdah Last Updated: July 28, 2019) இது வரை காலமும் ஆலய மரபினுக்குள் முடங்கிக்கிடந்த பாலசரஸ்வதி அவர்களுடைய கலையின் மேன்மை உலகினுக்குத்தெரிய ஆரம்பித்தது என்றே சொல்லலாம். இதன் பயனாக பாலசரஸ்வதி அம்மையாரவர்களது ஆற்றல் பட்டைதீட்டிய வைரம் போல உலகினுக்கே துலங்கத்தொடங்கியது. பாலசரஸ்வதி அவர்களுடைய முனைப்பானது பாரதக்கலைக்கும் இசைக்கும் ஒரு புத்துணர்ச்சியுடனான வளர்ச்சிக்கு வழிவகுத்தது என்றால் மிகையில்லை.

இவருடைய பரம்பரை கலைக்காகவே தம்மை அர்ப்பணித்திருந்தது. இந்தவகையிலே இவர் ஏழாவது பரம்பரையினைச் சேர்ந்தவராயிருந்தார். இவருடைய மூதாதையினரில் ஒருவராகிய பப்பம்மாள் 18ம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலே தஞ்சாவூர் சமஸ்தானத்திலே இசை மற்றும் நாட்டியக்கலைஞராக இருந்தவர். இவரது தாய்வழிப்பேர்த்தி வீணை தனம்மாள் மிகச்சிறந்த விதூஷியாக இருந்து இசை வளர்த்தவர்.(1867 – 1938) இவரது தாயார் ஜெயம்மாள் (1890 – 1967) மிகச்சிறந்த இசைக்கலைஞராகத் திகழ்ந்தது மாத்திரமல்லாமல் பாலசரஸ்வதி அம்மாளைப் புடம்போட்டு கலைவழி வழிப்படுத்திய பெருமைக்குரியவர். (**Tanjore Balasaraswati – The Great** Indian Dancer Who Popularized Bharatanatyam All Over The World Raj Kumar Hansdah Last Updated: July 28, 2019)

இவரது 16வது வயதிலே முதன்முதலாக தென்னிந்தியாவிற்கு அப்பாலான பிரதேசங்களிலே ஆற்றுகை செய்த முதலாவது கலைஞராக இவர் கொள்ளப்படுகின்றார். ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் இயற்றிய 'ஜனகனமன' என்ற பாடல் இந்தியாவின் தேசியகீதமாவதற்கு முன்பே அப்பாடலுக்கு அபிநயித்த பெருமைக்குரியவர். தாகூர்

அவர்களது வழிப்படுத்தலிலே 1935ம் வருடம் பனாரசிலே நிகழ்ந்த அகில இந்திய இசைமாநாட்டிலே பரதமாடி சம்புகு மஹாராஜாவினுடைய பாராட்டைப்பெற்ற பெருமைக்குரியவர் பாலசரஸ்வதி அவர்கள்.

**உலக அரங்கிலே பரதம்**

1961ல் இவரது முதலாவது மேனாட்டுப்பயணம் ஏற்பாட்டாகியிருந்தது. டோக்கியோவில் நிகழ்ந்த கிழக்கு மேற்கு கலையுறவுக்கான கருத்தரங்கிலே கலந்து ஆடவும் செய்தார். இதன் பயனாக பரதம் தமிழகத்திற்கு அப்பாலும் புரிதலுக்குள்ளாக வழிவகுத்தது. இவ்வாறு தொடர்ந்த அவரது கலைப்பயணம் ஐக்கிய அமெரிக்கா, மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும் கலைக்கான பயணத்தைத் தொடர்ந்து பலரின் பாராட்டுக்களையும் பெற்றதோடல்லாமல் பரதத்திற்காக அரும்பணியாற்றினார் என்றால் தவறில்லை. சர்வதேசத்திற்கும் பரதம் பற்றிய அறிமுகத்தை ஏற்படுத்துவதற்கு அவரது பணிகள் மிக முக்கிய இடத்தைப்பெற்றன. உலகின் வட எல்லைவரை பரதக்கலைபற்றியும் இசைபற்றியும்; தெரியப்படுத்திய ஒரே கலைஞர் பாலசரஸ்வதி அம்மையார் அவர்களே.

**பாலாவின் கலைநுட்பங்கள்**

ஆடலைக்காணும் சபையோரைத் தனது ஈடு கூறமுடியாத கலைத்திறன் என்ற மந்திரத்தால் கட்டுண்டு மெய் மறக்கச்செய்துவிடும் ஆற்றலை பாலா அவர்கள் கொண்டிருந்தார். நிருத்தத்திலே அபார தேர்ச்சி கொண்ட பாலசரஸ்வதி அம்மையார் அவர்கள் பின்னாட்களில் கலையின் முதிர்ச்சியின் பயனாக அபிநயம் என்கின்ற பகுதியிலே அதிக கவனம் செலுத்தத் தொடங்கினார். ஷேத்ரக்ஞர் பதங்கள் பாலா அவர்கள் மிகச்சிறப்பாக ஆத்மார்த்தமாகச் செய்யும் பகுதிகளில் மிகவும் முக்கியமானது. நாட்டியத்திலே எந்த பாவத்தையும் ஆத்ம சுத்தியோடு ஆழமாக அனுபவித்து சமர்ப்பிக்கும் மிகுந்த சிறப்பான பண்புகளைக்கொண்டவர் பாலா.

பாலாவும் விருதுகளும்.

இவர் ஏராளமாக விருதுகளும் மேன்மைகளும் பெற்றிருந்த பொழுதிலும் இந்திய அரசின் அதி மேதகு விருதான 'பத்மபூஷன்' விருது 1977 இலும் சென்னை கர்நாடகசங்கீத அக்கடமியின் விருதான 'சங்கீத கலாநிதி' விருது 1993 இலும் கிடைக்கப்பெற்றார்.

1984 இல் இவரது மறைவின் பின் 2010ம் வருடத்திலே இந்திய அரசு இவரது படம் பொறிக்கப்பட்ட அஞ்சல் முத்திரையினை வெளியிட்டு கலை மரபினுக்குப் பெருமை சேர்த்தது.

இவரது கலைப்பணியின் தொடர்ச்சியாக இன்றும் இவரது வழித்தோன்றல்களால் இசைக்கல்லூரி நிறுவப்பட்டு குழந்தைகளுக்கு கலை போதித்து வருகின்றது.

அதே பாலசரஸ்வதி அம்மாள் அவர்களுடைய ஆரவாரமற்ற ஆழமான கலைத்துவத்திற்கான தொடர்ச்சி இன்றும் தொடர்ந்துகொண்டிருக்கின்றது.

முடிவுரை

தமிழோடு ஒருங்கே இணைந்து வளர்ந்த கலைகள் காலந்தோறும் தோற்றம் பெற்றவர்களால் பேணிக்காத்தும் வளர்த்தும் நிதிருப்பதை வரலாறுகள் வாயிலாகத் தெரிந்துகொள்ளமுடிகின்றது. இந்நிலையிலே தமிழ்ச்சமூகத்திலே பாரிய பின்னடைவினை உள்வாங்கிக்கொண்ட இசையும் நடனமும், 19ம் நூற்றாண்டிலே இதன் காத்திரமுணர்ந்தவர்களால் மிகுந்த முயற்சிகளின் பயனாக சமூகத்தினுள்வாங்கப்பட்டது. இதற்கு பலரது ஈடிணையற்ற உழைப்பும் அர்ப்பணிப்பும் இணைந்திருக்கின்றது. இம்முன்மாதிரியான செயற்பாடுகளிலே ஸ்ரீமதி பாலசரஸ்வதி அம்மையாரின் பணி மிகமுக்கியமாகின்றது என்றால் மிகையில்லை.

**சான்று நூல்கள்**

மரபு தந்த மாணிக்கங்கள் - தஞ்சாவூர் பி எம் சுந்தரம், டாக்டர் வே ராகவன் நிகழ் கலைகள் மையம், சென்னை -20.

BALASARASWATHI, HER ART SND LIFE HANDCOVER – 11OCT-2011

TRACING BALASARASWATI'S JOURNEY, THE HENGU – 18-02-2018

Virginia Gortinski, T. Balasaraswathi, Indian Dancer and Singer, ENCYCLOPEDIA BRITTANIKA.